சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.06.2026.
SC.NO.204/2019
PW6 : Lw2- முத்து கிருஷ்ணன் (வயது 48 ) த/பெ.பெருமாள்சாமி
(2,4,5,6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 1,3 எதிரிகள் ஆஜர் இல்லை)
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவெறும்பூர் சட்ட ஒழுங்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் வருடம் திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் முதல்நிலை காவலராக பணி புரிந்தபோது, 06.09.2017 ஆம் தேதி உதவி ஆய்வாளர் செல்வராஜ் உடன் நான், முதல்நிலை காவலர் செல்வகுமார், முதல்நிலை காவலர் சுதாகர், சிஐயு தலைமை காவலர் திருகுமார் ஆகியோர் ரோந்துக்காக சமயபுரம், நம்பர் 1 டோல்கேட் சென்று கண்காணித்தோம்.

எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் கொணலை பக்கத்தில் உள்ள ஷேறாட்டல் அருகில் போய் பார்த்தபோது, டிஎண் 27 யு 1113 ஈச்சர் வாகனமும், டின் 48 எஸ் 1764 ஆம்னி வேனும் அங்கு நின்று கொண்டிருந்தது. ஈச்சர் வேனிலிருந்து ஆம்னி வாகனத்திற்கு வெளிமாநில தடை செய்யப்பட்ட மது பாட்டில்கள் 170 ML கொள்ளளவு கொண்ட மது பாட்டில்களை மாற்றி வைத்தார்கள்.

நாங்கள் அவர்களை பிடிக்க சென்றபோது, 5 நபர்களில் 2 நபர்கள் ஓடிவிட்டாகள் மீதி 3 நபர்களை மட்டும் பிடித்தோம். அதில் 2 நபர்களின் பெயர்கள் மண்ணச்சநல்லூரை சேர்ந்த அண்ணாதுரை, தர்மலிங்கம் என தெரியவந்தது. மற்றொருவர் பாண்டிச்சேரியை சேர்ந்த மணிகண்டன் ஆவார். தப்பித்து சென்றவர்களை யார் என்று விசாரித்தபோது,. ஈச்சர் வாகன டிரைவர் சிவகுமார் என தெரியவந்தது.

ஈச்சர் வாகனத்தை சோதனை செய்தபோது, ACE AAA லேபிள் ஒட்டப்பட்ட 750 ML அளவு கொண்ட 12 பாட்டில்களை கொண்ட 400 அட்டை பெட்டிகளும். Black Grapes என்று லேபிள் ஒட்டப்பட்ட அதே அளவுள்ள 10 அட்டை பெட்டிகளும், அதே அளவுள்ள 50 அட்டை பெட்டிகள் ஆம்னி வேனிலும் இருந்தது.

ஆம்னிவேனில் இருந்த அட்டை பெட்டிகளை திறந்து பார்த்தபோது, மூடி திறந்த நிலையில் பாட்டில்கள் இருந்தது. அதை நுகர்ந்து பார்த்தபோது, கொடிய நெடியுடன் கூடிய

வாசனை இருந்தது. அந்த பாட்டில் மதுவினை பொதுமக்கள் அருந்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரியவந்ததால், காவல் ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தோம். உடன் கிளம்பி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து, எங்களிடம் வாக்குமூலம் பெற்றார். சரக்கு வாகனங்களையும், சரக்குகளையும் மகஜர் தயார் செய்து பறிமுதல் செய்தார்.

அந்த மகஜரில் நானும், முதல்நிலை காவலர் செல்வகுமாரும் கையொப்பம் இட்டோம். எதிரி மணிகண்டனிடம் வாங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது. அது **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அண்ணாதுரையிடம் வாங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அது **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி தர்மலிங்கத்திடம் வாங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அது **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி குமாரிடமிருந்து சாம்சங் டியோஸ் டச் ஸ்கீரின் மொபைல் கைப்பற்றப்பட்டு தயாரித்த மகஜரில் 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த மகஜரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மணிகண்டனிடமிருந்து கைப்பற்றிய ஈச்சர் லாரி IMFL பாட்டில்கள் 4800 எண்ணிக்கை கொண்டது மற்றும் IMFL பாட்டில்கள் 120 எண்ணிக்கை கொண்டது கைப்பற்றப்பட்டது, அதற்கான மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையைது தான். அது **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி அண்ணாதுரையிடமிருந்து கைப்பற்றிய ஆம்னிவேன் டிஎன் 48 எஸ் 1764 ன் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி தர்மலிங்கத்திடமிருந்து Black Grapes பிராந்தி 750 ML அளவு கொண்ட 50 அட்டை பெட்டிகள் 12 எண்ணிக்கை கொண்ட மொத்தம் 600 பாட்டில்கள் உள்ளடங்கியது அதனை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரியிடமிருந்து கைப்பற்றிய கார், ஈச்சர் வாகனம் மற்றும் பாட்டில்கள் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் அது ஏற்கனவே அ.சா.பொ.11,12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பு கு.வி**</u>

ரோந்திற்கு காலை 7 மணிக்கு மன்னார்புரம் ஆயுதப்படை அலுவலகத்திலிருந்து கிளம்பினோம். எந்த வாகனத்தில் அனைவரும் கிளம்பினோம் என்றால் அவரவர்கள் இருசக்கர வாகனத்தில் கிளம்பினோம். அனைவரும் ஒன்றாக ரோந்திற்கு சென்றோம். எந்தெந்த இடத்திற்கு ரோந்து சென்றோம் என்றால் நம்பர் 1 டோல்கேட், சமயபுரம், மண்ணச்சநல்லூர் மற்றும் கொணலையில் உள்ள NRSM ஹோட்டல் அருகில் சென்றோம்.

மேற்சொன்ன ஹோட்டலுக்கு செல்வதற்கு 1.30 மணி நேரம் ஆகியிருக்கும். ஆய்வாளருக்கு யார் தகவல் சொன்னது என்றால், உதவி ஆய்வாளர் தகவல் சொன்னார், நான் தகவல் சொல்லவில்லை. காலை 8.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் எத்தனை மணிக்கு தகவல் சொன்னோம் என்றால் காலை 9 மணிக்கு தகவல் சொன்னோம். ஆய்வாளர் அந்த இடத்திற்கு காலை 9.45 மணிக்கு வந்தார்.

நான் பாக்கெட் டைரி பராமரிக்கும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பாக்கெட் டைரியை விசாரணையின்போது ஆய்வாளரிடம் காட்டினேனா என்றால் காட்டினேன். எத்தனை மணிக்கு ரோந்து ஆரம்பித்தோம், எந்தெந்த இடத்திற்கு ரோந்து சென்றோம் என்றும் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்பதையும் அது குறித்து தகவல் தெரிவித்த விவரத்தையும் எனது பாக்கெட் டைரியில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

நான் சாட்சி கையொப்பம் செய்துள்ள வாக்குமூலங்களில் குற்ற எண்ணும் அதன் சட்ட பிரிவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை எங்கள் காவல் நிலையத்தில் பிரிண்ட் எடுத்துக்கொண்டோம் என்றால் சரிதான். உண்மையில், நாங்கள் ரோந்து செல்லவில்லை என்றும் எதிரியை பிடிக்கவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எதிரிகளிடமிருந்து பெறவில்லை என்றும், அதேபோல், எதிரிகளிடமிருந்து எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை என்று

கூறினால் சரியல்ல. ஆய்வாளர் கூறியதன் பேரில், நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்பதால் தான் எனது சாட்சிய விவரங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை .

/signed/
முத்து கிருஷ்ணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி